ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2129/87 - 2019 ජුනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28

*2129/87 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறியீட்டு இல.: டிக்/லேன்/02/31-ii.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மாத்தறை மாவட்டத்தில் திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவில், ஸுதுவெல்ல கிராம அலுவலர் பிரிவில், ஸுதுவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள, மாத்தறை சிரேஷ்ட நில அளவையாளர் நாயகத்தின் இல. மு.பி. மாறை 2792 ஆம் அசல் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள கீழ்வரும் காணித் துண்டுகள் :

*01.* **துண்டு இல. *01***

காணியின் பெயர் : கெதரவத்த; விபரம் : திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர் : சவுந்த ஹென்னதிகே ஞானசிறி, ஸுதுவெல்ல, கோட்டகொட; விஸ்தீரணம் : 0.0031 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. *02***

காணியின் பெயர் : கெதரவத்த; விபரம் : திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர் : சவுந்த ஹென்னதிகே ஞானசிறி, ஸுதுவெல்ல, கோட்டகொட; விஸ்தீரணம் : 0.0033 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 02 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு திக்வெல்ல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எஸ். ரஞ்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்ல.

பிரதேச செயலகம்,
திக்வெல்ல,
2019, யூன் 26.

7 - 403



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.